Shaivam.org

# நடராஜ வடிவம்

## தில்லைத் திருநடனம்



விபுலாநந்த அடிகள்

வேலணையூர்

திருவாட்டி சண்முகம்பிள்ளை பொன்னம்மா

நினைவு வெளியீடு

02-03-1985

# நடராஜ வடிவம்

## தில்லைத் திருநடனம்

விபுலாநந்த அடிகள்

1940 ஆம் ஆண்டு
சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துத் தலைவரால்
பிரசுரிக்கப்பட்ட நூல் நன்றியுடன்
இலவச வெளியீடாக மலர்கிறது.

02 — 03 — 1985

## திருவிருத்தம்

குனித்த புருவமும் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன்
மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற்
பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேயிந்த மானிலத்தே.



# வெளியீட்டுரை

> தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்'

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வான்மொழிக்கு வாழிலக்கியமாய்த் திகழ்ந்தவர் திருவாட்டி பொன்னம்மா சண்முகம் பிள்ளை அவர்கள். தம்மைக் கொண்டவரின் வளத்துக்குத் தக வாழ்ந்து வளத்தை வளர்த்துப் பிள்ளைகள் பதின்மரைச் சான்றோராய் உருவாக்கி அவர்களை வாழ்வாங்கு வாழவைத்த மாதரசி இவர்.

பெருங்குளம் முத்துமாரி அம்பாள் கோயிலிலே தம் கணவர் தொடக்கிய நடராஜத் திருவுருவப் பிரதிட்டையினை அவர் மறைந்த பின்னரும் முன்னின்று தொடர்ந்து முற்றுவித்த பெருமையும் இவ்வம்மையார்க்கு உண்டு.

தில்லை நடராஜப் பெருமானின் குஞ்சிதபாதக் குளிர் நிழலினைச் சேர்ந்துவிட்ட இவரின் நினைவாக இவரின் மக்கள் விபுலாநந்த அடிகள் எழுதிய 'நடராஜ வடிவம் — தில்லைத் தரிசனம்' என்ற சிறுநூலை வெளியிடுவது சாலப் பொருத்தமே.

1941 இல் இராமகிருஷ்ண மட வெளியீடாக மலர்ந்த இந்நூல் ஆழ்ந்த பொருளமைதியும், சமய உணர்வும் கொண்டது. இன்று இது கிடைப்பது அரிது என்பதால் திருவாட்டி பொன்னம்மா சண்முகம்பிள்ளை அவர்களின் மக்கள் பணி 'காலத்காற் செய்த பேருதவி' என்பதற்கு ஐயம் இல்லை. அவர்களுக்குச் சைவத் தமிழ் கூறும் நல்லுலகின் சார்பில் இதயங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறப்பாக அம்மையாரின் கனிட்ட புதல்வரும் கனித்தமிழ் வல்லாருமான திரு. ச. பாலசுந்தரம் அவர்களுக்கு அவரின் ஆர்வத்திற்கும் முயற்சிக்கும் ஆழ்ந்த நன்றிகள் கூறுவது என் கடன். நண்பர் மயிலங்கூடலூர் பி. நடராசன் நூற்பிரதியை உதவியமைக்கு அவருக்கும் கடப்பாடுடையேன்.

நூலை அழகுற வெளியிட்ட ஸ்ரீகாந்தா அச்சகத்தினர்க்கும் அன்புடன் கூடிய நன்றி உரியதாகுக.

நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.
02 - 03 - 85

க. சொக்கலிங்கம்
(சொக்கன்)

திருச்சிற்றம்பலம்

# நடராஜ வடிவம்

"பூங்கமலத் தயனுமலர் புண்டரிகக் கண்ணனும்
தாங்குபல புவனமுமேற் சகலமுமா யகலாத
ஓங்குமொளி வெளியேநின் றுலகுதொழ நடமாடுந்
தேங்கமழும் பொழிற்றில்லைத் திருச்சிற்றம் பலம்போற்றி.

"ஆரணங்கண் முடிந்தபதத் தானந்த வொளியுலகிற்
காரணங்கற் பனைகடந்த கருணைதிரு வுருவாகிப்
பேரணங்கி னுடனாடும் பெரும்பற்றப் புலியூர்சேர்
சீரணங்கு மணிமாடத் திருச்சிற்றம் பலம்போற்றி."

## சிவாகமங்களின் முடிபு சிற்சபேசன்

ஆகமங்கள் இலக்கண நூல்கள்; சிற்சபேசனும் சிற்றம்பலமும் அவ்விலக்கணங்களாற் கூறப்படுகின்ற இலக்கியங்கள். இலக்கிய ஆராய்ச்சியில்லாதோர் இலக்கண நூலறிவு நிரம்பப்பெறார்; அதுபோலச் சிற்சபேசனைத் தெரியாத மாந்தர் சிவாகமப் பொருளை உணர்ந்து கொள்ளமாட்டார். இனி, இலக்கிய நூலுணர்ச்சிக்கு இலக்கணவுணர்ச்சி இன்றியமையாதிருப்பது போலச் சிற்சபேசனாகிய நடராஜப் பெருமானுடைய அருள்வடிவத்தினியல்பினைச் சிறிதாவது உணர்ந்து கொள்வதற்குச் சிவாகமவுணர்ச்சி இன்றியமையாததாகின்றது. சிவாகமங்கள் சிவவாக்கு; முற்றறிவனாகிய இறைவன் வேதாகமங்களை அருளிச் செய்திலனேல், சிற்றறிவராகிய யாம் அவனையுணர்ந்து அவனது திருவடிக் கமலத்தை யடைதல் இயலாததொன்றாகும். பிற்காலத்தில் மதுரையிலிருந்து தமிழாராய்ந்த புலவரது கவற்சியை நீக்கத் திருவுளங்

கொண்டு அருந்தமிழிலக்கண நூலாகிய களவியலை அருளிச் செய்த தலைவன் ஆதிநாளில் வேதசிவாகமங்களையருளிச் செய்தனன்.

"மதியியலு நெடும்புரிசை மணிமாட
மதுரைநகர் மருவு சங்கம்
விதியியலு மிலக்கணநூற் பொருளியலை
யுணர்ந்துய்ய மேலோர்க் கின்பம்
பொதியியலின் றமிழியலுங் களவியலை
யுவந்தளித்த புலவன் முன்னாட்
பதியியலும் பசுவியலும் பந்தத்தி
னியலுமுற்றும் பகர்ந்தான் மன்னோ."

இறைவனால் அருளிச் செய்யப்பட்ட சிவாகமங்களும் அவற்றின் வழி நூல்களும் இறைவனுக்கு உருவத் திருமேனி யுண்டென்றும் அவ்வுருவத் திருமேனி "நடராஜர், சந்திரசேகரர், உமாமகேசர், ரிஷபாரூடர், கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, ஜலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், ஹரியர்த்தர், அர்த்தநாரீசுவரர், கிராதர், கங்காளர், சண்டேசானுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், கஜமுகானுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசனர், தக்ஷிணாமூர்த்தி. இலிங்கோற்பவர்" என இருபத்தைந்து வகைப்படும் என்றுங் கூறுகின்றன.

### உருவத்திருமேனியைக் காட்சியாற் காணலாம்

ஆகவே, இறைவனுக்கு நடராஜ வடிவமாகிய உருவத்திருமேனியுண்டென்று ஆகமப்பிரமாணத்தினாலறிகின்றோம். "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்," என்னும் ஒரு சாரார், "இறைவனுக்கு உருவத்திருமேனியுளதாயின், அது எம்மாற் காணப்படுவதாகவேண்டும்; நாம் கண்டிலம். ஆதலினால் இறைவனுக்கு உருவத்திருமேனியில்லை" என்பார். ஒரு சார் மத நூல்களும் 'கடவுள் அரூபி; சிலை முதலிய விக்கிரகங்களாற் கடவுளைக் குறியீடு செய்து வழி



படுகின்ற மார்க்கம் அஞ்ஞான மார்க்கம்' என்று அங்காடிஞானம் பேசத் தலைப்படுகின்றன. இங்ஙனம் பேசுகின்ற மத நூல்கள் தம்மை மறந்து, இறைவன் நெருப்புச் சுவாலை வடிவமாக ஒருவர் கண்முன் தோற்றினானெனவும், புறா வடிவமாக மற்றொருவர் தலைமீது இறங்கினானெனவுங் கூறுகின்றன. "கடவுள் எங்கண்ணுக்குத் தோற்றவில்லை ஆதலாற் கடவுளுக்கு உருவமில்லை" என்று சொல்பவர் சற்று ஊன்றி யோசிப்பாராயின், காட்சியின்மை காட்சிப்பொருளின்மையினால் மாத்திரம் எய்துவதல்ல; பிறகாரணங்களாலும் காட்சியின்மையுண்டாதல் கூடுமென அறிந்துகொள்வார். ஒருவனுடைய கண்கள் துணியினாற் கட்டப்பட்டிருக்கும் பொழுது அவன் தன் முன் வைக்கப்பட்ட பொருளைக் காணமாட்டாதவனாகின்றான். இருட்டறையினுள்ளேயடைபட்டிருப்பவன் அவ்வறையின் சுவர்களிலே தொங்குகின்ற சித்திரங்களினழகை யொருவாற்றானுமறியமாட்டான். நமது இருதயமாகிய அறை பேரந்தகாரமாகிய மலத்தினால் மறைப்புண்டிருக்கிறது. நம்முயிர்க்குயிராகிய இறைவன் நமது இருதய கமலத்தின்மீது உறைகின்றானெனினும் அந்தகாரத்தினுட்பட்ட யாம் அவனைக் காண்பதில்லை. அவனது திருவருள் விளக்கமாகிய பகலவன் நமது இருதயத்தினுட் பிரகாசிக்கும்போது நாம் இறைவனைக் காண்போம்; நமது கண்கள் பாவமாகிய துணியினாற் கட்டப்பட்டிருக்கின்றன; ஞானாசாரியனாகிய அருட்குரவன் கட்டை யவிழ்த்து விடுவானாயின், நாம் கடவுளை நேராகக் கண்டு தரிசிப்போம். திருஞானசம்பந்தப் பிள்ளையாரும் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ச தேவரும் கடவுளை நேராகக் கண்டார்கள். சீகாழிப் பெருவாழ்வாகிய திருஞான சம்பந்தப் பிள்ளையார் தங் கண்முன் தோன்றிய இறைவனது உருவத் திருமேனியை இன்ன இன்ன இலக்ஷணமுடையதென அழகுபொருந்திய தேவாரத் திருப்பதிகங்களினால் விரித்துக் கூறியிருக்கின்றார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் எந்தக் காரியந் தொடங்கும்போதும், அன்னை

யைக் கேட்டுவிட்டு வருகிறேனென்று சொல்லி, உலக மாதாவை நினைப்பர்; அகிலாண்டேசுவரி தனது தெய்வ வுருவத்தோடு அவர் கண்முன் தோன்றி, அவர் கேள்விகளுக்குப் பதிலளித்துவிட்டு மறைவாள். மனமாசு நீங்கிய பெரியோர் கண்முன்றோன்றிய தெய்வ வுருவம் ஒன்றல்ல; பலவாகும். முழுமுதற் பொருளாகிய கடவுளைக் காவற் கடவுளாகக்கண்ட ஞானிகள், எம்பெருமானை சங்கு, சக்கரம், கதை, கட்கம், கோதண்டம் என்னும் ஐந்து ஆயுதங்களை யேந்திய நீலநிறத் திருமேனி பொருந்திய விஷ்ணுமூர்த்தமாகக் கண்டு தரிசித்தார்கள். அக்கினிச் சுவாலையின் நிறமும், சூலமும், பிநாகமும், டமருகமும், அக்கினியும் ஏந்திய திருக்கரங்களும், மான் மழுவும், அக்குமாலையும் என்னும் இவற்றோடு கூடிய உருத்திர மூர்த்தமாகக்கண்டு வழிபட்டார் ஒருசாரார். உமாதேவியார் ஒரு பக்கத்தில் அமர்ந்திருக்கத் தருமதேவதையின் உருவமாகிய வெள்ளை விடையின்மேல் ஆரோகணித்து, இளம்பிறைச் சந்திரனும் கங்காநதியும் சடையின்மீது விளங்கப் பவளம் போன்ற திருமேனியில் வெள்ளிய திருநீறு பொலிந்திருப்பத் தோன்றிய திருவுருவத்தைத் தவத்தின் மிக்கார் பலர்கண்டு கைதொழுதார். இந்த உமாமஹேஸ்வர வடிவமே மூவர் தேவாரங்களிலும் பெருகக் கூறப்படுவது. மாணிக்கவாசக சுவாமிகள் தம்மையாட்கொண்ட குரு வடிவத்தையும் வேதமாகிய குதிரையின் மீதேறிவந்த திருவுருவத்தையும் நினைந்து மனமுருகிப் பாடியிருக்கின்றார். சிதம்பரத்திலே கனகசபையின் கண்ணே ஆநந்த நடனஞ் செய்யும் திருவுருவத்தின் இயல்பைச் சமயகுரவரும் சந்தானசாரியரும் பிறரும் அழகுபெறச் சொல்லியிருக்கின்றார்கள்.

### அநுமானப் பிரமாணத்தினாலும் அறியலாம்

ஆகமப் பிரமாணத்தினாலும், காட்சிப் பிரமாணத்தினாலும் உருவத்திருமேனியின் உண்மை நிச்சயிக்கப்



படத்தக்கது எனக் காட்டினோம். இனி, இவ்வுண்மை அநுமானப் பிரமாணத்தினாலும் அறியப்படுவது எனக் காட்டுவாம். சடமுஞ் சித்துமாகிய சேதனாசேதனப் பிரபஞ்சம் தோன்றி நின்றழிவதைக் காண்கின்றோம்; பிரபஞ்சத்தைப் பஞ்சகிருத்தியப்படுத்துகின்ற தலைவன் ஒருவனுளன் எனவும், அறிவினால் நிச்சயித்துக் கொள்ளுகிறோம். இந்தத் தலைவன் குணங்குறி கடந்தவனா, குணங்குறியோடு கூடினவனா என ஆராய்தல் வேண்டும். குணங்குறி கடந்த நிலையிற் செயலில்லை. செயல் தோற்றும்போது குணமுமுடன்றோற்றுகிறது. குணம் உருவத்தைச் சார்ந்து நிற்பது; குண வேறுபாட்டினாலேதான் உருவ வேறுபாடு தோற்றுகின்றது. இங்ஙனம் ஆராயும்போது குணங்குறி கடந்த நிர்க்குண நிலை உருவமற்ற நிஷ்கள நிலையாமெனவும், குணங்குறியோடு கூடிய சகுணநிலை உருவத் திருமேனியோடு கூடிய சகள நிலையாமெனவும் அறிகின்றோம். இவையிரண்டினுக்கும் இடையாய நிஷ்களசகளத் திருமேனியும் ஒன்று உண்டு எனப் பின்னர்க் காட்டுவோம். நிஷ்களம், நிஷ்களசகளம், சகளம் என்பவற்றை முறையே அருவம், அருவுருவம், உருவம் என வழங்குவாம். இனி உயிர்களாகிய நமக்குத் தனது பூரணவியல்பையுணர்த்தும் பொருட்டு ஞானாசாரியனாக வருகின்ற எல்லையில், பரமபதியாகிய இறைவன் மானிடச்சட்டை சாத்தி நம்மனோரைப்போல, ''ஊண், உறக்கம், இன்பதுன்பம், பேர் ஊர் ஆதி ஒவ்விட'' வருவது இன்றியமையாததாகின்றது.

''காணரிய வல்லவெல்லாந் தானே கட்டுக்
கட்டாக விளையுமதைக் கட்டோ டேதான்
வீணினிற்கர்ப் பூரமலை படுதீப் பட்ட
விந்தையெனக் காணவொரு விவேகங் காட்ட
ஊணுறக்க மின்பதுன்பம் பேரூ ராதி
யொவ்விடவு மெனைப்போல வுருவங் காட்டிக்
கோணறவோர் மான்காட்டி மானை யீர்க்குங்
கொள்கையென வருமௌன குருவாய் வந்து.''

எனத் தாயுமான சுவாமிகள் கூறியதனை நோக்குக. இனி மானிடராகிய நம்முடைய வடிவம் தானாக எழுந்த மூல வடிவமா, அன்றேல், பிறிதொரு வடிவத்தைப் பார்த்து அமைக்கப்பட்ட வடிவமா, என ஆராய்தல் வேண்டும். சித்திர மெழுதுவோன் ஒரு வடிவத்தை நேரிற் பார்த்தோ நினைவினாற் பார்த்தோ மற்றொரு வடிவத்தை யெழுதுகிறான். படைத்தற் கடவுளாகிய பிரமதேவன் எந்த மூலவுருவத்தைப் பார்த்து ஆண் பெண்பாலராகிய மானிடரது உருவத்தை யமைத்தான் என்று விசாரிப்போமாயின், அநாதியாக அமைந்து நின்ற சிவ வடிவத்தையும், சக்தி வடிவத்யையும் பார்த்து அமைத்தானென அறிந்து கொள்வோம்.

## உருவத்திருமேனி அருள்வடிவம்

இறைவனுக்கு உருவத்திருமேனி யுண்டென அறிந்தாம். அவ்வுருவம் நம்மனோருக்குரிய உருவத்தைப் போன்றதாயின், அதனை உண்டாக்குதற்கு ஒரு கருத்தா வேண்டும். நமது உருவம் மாயாகாரிய வடிவமாகும்; இறைவன் நின்மலனாதலினால் அவனுடைய உருவத் திருமேனி மாயாகாரிய வடிவமன்று. நிறைந்த ஞானமுஞ் செயலுமுடைய முதல்வன் உயிர்கண்மாட்டு வைத்த கருணையினால் தான் நினைந்ததொரு திருமேனியைக் கொண்டருளுவன்.

குறித்ததொன் றாகமாட்டாக் குறைவில னாதலாலும்
நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமையானும்
வெறுப்பொடு விருப்புத் தன்பால் மேவுத லிலாமையானும்
நிறுத்திடு நினைந்த மேனி நின்மல னருளினாலே

முதல்வனது திருவுரு அருள் வடிவமாதலால், அவ்வுருவிலே தோன்றும் குணங்கள், உணர்வு, கருமம், கரசரணாதி, சாங்கோபாங்கம் அனைத்தும் அருள் வடிவமேயாம். இவற்றையெல்லாம் இறைவன் உயிர்களின் பொருட்டென்றே யெடுத்துக்கொண்டனன்.



உருவருள் குணங்க ளோடு முணர்வரு ளுருவிற் றோன்றுங்
கருமமு மருள ரன்றன் கரசர ணாதி சாங்கந்
தருமரு ளுபாங்க மெல்லாந் தானரு டனக்கொன் றின்றி
அருளுரு வுயிருக் கென்றே யாக்கின னசிந்த னன்றே.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்சகிருத்தியங்களைச் செய்தற் பொருட்டும், மெய்யடியார் தியான பாவனை செய்தற்பொருட்டும், வேதாகமங்களின் பொருளை யுணர்த்தற்பொருட்டும், ஆன்மாக்களுக்குப் போகத்தைக் கொடுத்துப் பாசத்தைக் கெடுத்து முத்தியை அளித்தற் பொருட்டும், முதல்வன் உருவத் திருமேனி கொள்ளவேண்டியது இன்றியமையாததாமெனச் சைவசித்தாந்த வழி நூல் கூறும்.

படைப்பாதித் தொழிலும் பக்தர்க் கருளும்பா வனையு நூலும்
இடப்பாக மாத ராளோ டியைந்துயிர்க் கின்ப மென்றும்
அடைப்பானு மதுவு முத்தியளித்திடும் யோகும் பாசந்
துடைப்பானுந் தொழிலு மேனி தொடக்கானேற்
சொல்லொ ணாதே,

## சிவ பேதங்கள் ஒன்பது

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலையுஞ் செய்கின்ற நிலையில் தனிப் பரம்பொருளாகிய இறைவன் முறையே பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்னும் ஐந்து மூர்த்திகளாக விளங்குவான். இவையைந்தும் சிவம், சக்தி, நாதம், விந்து என நான்கும் ஆகிய ஒன்பது பேதங்களாகவும் நடிப்பவன் முழுமுதற் கடவுளாகிய ஒருவனே யாவன்.

சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன் றிகழு மீசன்
உவந்தரு ளுருத்தி ரன்றான் மாலய னொன்றி னொன்றாய்ப்
பவந்தரு மருவ நாலிங் குருவரா லுபய மொன்றாம்
நவந்தரு பேத மேக நாதனே நடிப்ப னென்பர்.

சிவம், சத்தி, நாதம், விந்து என்னும் நான்கும் அருவத் திருமேனி; சதாசிவமூர்த்தம் அருவுருவத் திரு

மேனி; மகேசுவரன், உருத்திரன், மால், பிரமன் நான்கும் உருவத்திருமேனி. இவை ஒன்றிலிருந்தொன்றாகத்தோற்றும் முறையைத் ''தில்லைத் திருநடனம்'' என்னும் வியாசத்தினுட் காட்டுவாம். பிரமா படைத்தற்றொழிலொன்றினை மாத்திரம் உடையர்; விஷ்ணு படைத்தல் காத்தலுக்குரியர்; உருத்திரர் முத்தொழிலுக்குரியர்; மகேசுவரர் நாற்றொழிலுக்குரியர்; சதாசிவர் ஐந்தொழிலுக்குரியர். பஞ்சகிருத்தியங்களையுந் தன்னுள்ளடக்கி அவற்றுக்கு அப்பாலாகவும் நிற்பது முதல்வனது உண்மை வடிவம். ஆதலினால், பிரம விஷ்ணுக்களாலே அடிமுடி தேடிக் காண்டற்கரிய முழுமுதற் கடவுளது திருமேனியைக் குறிப்பிடுகின்ற உருவம் பஞ்சகிருத்தியங்களையும் காட்டி அவற்றுக்கு அப்பாலாகவும் நிற்கவேண்டும். சிற்சபையில் நடனஞ் செய்கின்ற ஆனந்த நடராஜனது திருவுருவம் பஞ்சகிருத்தியங்களையும் காட்டுவதோடு ஞானமயமாகிய சிதாகாசத்தின் இயல்பையும் அறிவுறுத்துவது. ஆதலினால் நடராஜ மூர்த்தம் ஏனைய மூர்த்தங்களினும் பார்க்கச் சிறப்புடையதாயிற்று.

### மந்திர வடிவம்; அத்துவா வடிவம்

இறைவனது மந்திர வடிவத்தைப் பற்றி ஒரு சில குறிப்புக்கள் கூறி யப்பாற் செல்வாம். மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணாத்துவா, புவனாத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா என ஆறு அத்துவாக்களுள. மந்திரங்கள் பதங்களாலும், பதங்கள் வர்ணங்களாலும், வர்ணங்கள் புவனங்களாலும், புவனங்கள் தத்துவங்களாலும், தத்துவங்கள் கலைகளாலும் வியாபிக்கப்பட்டனவென்று ஆகம நூல்கள் கூறுகின்றன. சப்தகோடி மகா மந்திரங்களும் மந்திராத்துவா வெனப்படுவன. இவற்றினுள் வியாபித்து நின்ற அநேக பேதங்களையுடைய பதங்கள் பதாத்துவா வெனப்படுவன. பதங்களுள் வியாபித்து நின்ற அகராதி ஹகாராந்தமாயுள்ள (வடமொழி நெடுங்கணக்கு) ஐம்பது அக்ஷரங்கள் வர்



ணாத்துவா வெனப்படுவன. இவற்றினுள் வியாபித்து நின்ற புவனங்கள் புவனாத்துவா எனப்படுவன. இவற்றினுள் வியாபித்து நின்ற சிவ தத்துவம் முதற் பிரகிருதி தத்துவம் இறுதியாகவுள்ள தத்துவம் முப்பத்தாறும் தத்துவாத்துவா. தத்துவாத்துவாவினுள் வியாபித்து நின்ற சிருஷ்டி சக்கரமாகிய நிவிர்த்திகலை, ஸ்துதி சக்கரமாகிய பிரதிஷ்டாகலை, சங்கார சக்கரமாகிய வித்தியாகலை, திரோபவ சக்கரமாகிய சாந்திகலை, அநுக்கிரக சக்கரமாகிய சாந்தியாதீதகலை ஆகிய ஐந்தும் கலாத்துவா எனப்படுவன. இவ்வாறு அத்துவாக்களையும் முதல்வனுக்குரிய வடிவமாக வேதாகமங்கள் கூறுகின்றன. உலகெலாமாகி நிற்றலும், அவற்றின் வேறாய் நிற்றலும், உடன் நிற்றலும் ஆகிய மூன்றும் இறைவனுக்குரிய இலக்கணங்களாதலின், வேதாகமங்கள் அவ்வண்ணம் உரைத்தன என அறிக. உலகுயிர்களெங்கும் அத்துவிதமாய்க் கலந்து பிரிவின்றி நின்றனவெனினும், இறைவன் உலகுயிர்களாகிய இவற்றின் றன்மைகள் தன்கட் பொருந்துதலின்றி நின்மலனாய் நிற்பான் என அறிக.

உலகெலா மாகி வேறா யுடனுமா யொளியா யோங்கி
அலகிலா வுயிர்கள் கன்மத் தாணையி னமர்ந்து செல்லத்
தலைவனா யிவற்றின் றன்மை தனக்கெய்த லின்றித் தானே
நிலவுசீ ரமலனாகி நின்றன னீங்கா தெங்கும்.

அத்துவா வடிவங்களுள்ளே மந்திர வடிவங்கள்சிறந்தன. சுத்த மாயையிலே தோன்றிய முதன்மையுடையனவாதலாலும், சிவசத்தி இவற்றையதிட்டித்து நின்று சாதகருக்குப் போகமோக்ஷங்களை யளித்தலாலும் ஏனைய அத்துவா வடிவங்களிலும் பார்க்க மந்திர வடிவங்கள் சிறப்பெய்தின. இவற்றினுள் உயிர்க்குறுதி பயக்கும் மகா மந்திரமாகிய பஞ்சாக்ஷரம் நடராஜ வடிவமாக அமைந்து நின்றது.

### பஞ்சாக்கர வடிவம்; பஞ்சகிருத்திய வடிவம்

பஞ்சாக்கர வடிவத்தினிலக்கணத்தையும், பஞ்சகிருத்திய வடிவத்தினிலக்க்ணத்தையும், 'உண்மை

விளக்க' நூலாசிரியராகிய திருவதிகை 'மனவாசகங் கடந்தார்' என்னும் பெரியார் உரைத்த செய்யுட்களினுதவியால் ஆராய்ந்துணர்வாம்.

ஆடும் படிகேணல் லம்பலத்தா னையனே
நாடுந் திருவடியி லேநகரங் — கூடு
மகர முகரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்.

(ஐயனே! எல்லா நன்மைகளுக்கும் ஆதாரமாகிய திருச்சிற்றம்பலவன் நடனஞ் செய்யும் முறைமையாகக் கொண்ட திருவுருவத்தின் இயல்பினைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. நினைத்தற்கரிய திருப்பாதத்திலே ந காரம் பொருந்தும்; திருவயிற்றிலே ம காரம் பொருந்தும்; வளர்ந்து தோன்றும் திருத்தோளிலே சி காரம் பொருந்தும்; சொல்லப்பட்ட திருமுகத்திலே வ காரம் பொருந்தும்; திருமுடியிலே ய காரம் பொருந்தும்.)

அஞ்செழுத்தே யாகமமு மண்ண லருமறையும்
அஞ்செழுத்தே யாதிபுரா ணம்மனைத்து — மஞ்செழுத்தே
ஆனந்தத் தாண்டவமும் யாவைக்கு மப்பாலா
மோனந்த மாமுத்தி யும்.

என்பதனால் ஐந்தெழுத்தே ஆனந்தத் தாண்டவமாமென அறிகின்றோம்.

சிவனரு ளாவி திரோதலமமைந்தும்
அவனெழுத் தஞ்சினடை வாம்.

என்றமையால் சிகார முதலாகிய ஐந்தக்கரங்களும் சிவன், அருள், ஆன்மா, திரோதம், மலம் எனும் ஐந்துமாம் என அறிக.



தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம் — ஊற்றமா
யூன்று மலர்ப்பதத்திலுற்றதிரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

(டமருக மேந்திய திருக்கரத்திலே படைத்தற்றொழிலையும், அமைத்த திருக்கரத்திலே காத்தற்றொழிலையும், அக்கினியேந்திய திருக்கரத்திலே சங்காரத் தொழிலையும், உறுதியாயூன்றிய திருப் பாதத்திலே மறைத்தற்றொழிலையும், தூக்கிய திருப்பாதத்திலே அருளற்றொழிலையும் ஆராய்ந்தறிவாயாக.)

ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

கற்பனை கடந்த சோதி கருணையே வடிவ மாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்து ணின்று
பொற்புறு நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

உரைமன மிறந்து நின்றவொரு தனிக்கடவுள் ஆன்மாக்கள் மீது வைத்த பேரருளினாலே அவ்வருளே வடிவமாகத் தோற்றுவான் என்னும் உண்மையை நடராஜ வடிவம் என்னும் வியாசத்தினுள் ஆராய்ந்துணர்ந்தாம் ஆங்கு உருவம் பற்றி யாராய்ந்தாம். தில்லைத் திருநடனம் என்னும் இத்தலைப் பெயர்க்கீழ்த் தொழில் பற்றி யாராய்வாம்.

### சிதம்பர ஸ்தலம்

முதலில் தெரிசிக்க முத்திதரும் ஸ்தலமாகிய சிதம்பர ஸ்தலத்தின் மகிமையைப் பற்றிச் சில குறிப்புக்கள் கூறி யப்பாற் செல்வாம். நிலவுலகத்திலுள்ள ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிக்கும் வண்ணம், முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்களுள்ளே மிகச் சிறந்த ஸ்தலம் சிதம்பர ஸ்தலமாம். இது முன்னாளில் தில்லைக் காடாகவிருந்த காரணம் பற்றித் தில்லைவனம் எனவும் வழங்கப்படும். புலிக்கால் முனிவராகிய வியாக்கிர பாதரும் ஆதிசேஷனுடைய அவதாரமாகிய பதஞ்சலி மகா முனிவரும் தவம் புரிந்து நடராஜ மூர்த்தியைக் கண்டு தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்ற இடம் இத்தில்லைவனமென்ப. இந்தத் தில்லைவனமானது விராட் புருடனுக்கு நடுநாடியாகிய சுழுமுனை நாடியாக அமைந்தது. இந்த ஸ்தலத்திலே மூல லிங்கத்துக்குத் தெற்கே



வேதங்களுங் காணாத நிலைபெற்ற சபையொன்றுண்டு; அச்சபையின் கண்ணே எம்மையாளுடைய ஐயன் எக்காலத்தும் ஆநந்த நிருத்தஞ் செய்தருளுவான் இவ்வுண்மையை,

நாடரு நடுவி னாடி நலங்கிளர் தில்லை நேர்போய்க்
கூடுமங் கதனின் மூலக் குறியுள ததற்குத் தென்னர்
மாடுறு மறைகள் காணா மன்னுமம் பலமொன் றுண்டங்
காடுது மென்று மென்றா னென்னையா ளுடைய வையன்,

என்னுங் கோயிற் புராணச் செய்யுள் இறைவனுடைய திருவாக்காக எடுத்துக் கூறும். அண்டமும் பிண்டமும் தம்முள் ஒப்புடைய வாதலினாலே, பிண்டத்தில் அமைந்திருக்கின்ற இடைநாடி, பிங்கலைநாடி, சுழுமுனை நாடியென்னும் இவற்றிற்கு நேரொப்பாக இலங்கை. இமயம், தில்லையாகிய மூன்று தலங்களும் அண்டத்தில் அமைந்திருக்கின்றன இடைநாடி இலங்கைக்கு நேராகச் செல்லும், பிங்கலைநாடி நன்மைமிக்க இமயமலைக்கு நேராகப் போகும், நாடுதற்கரிய சுழுமுனைநாடி தில்லை வனத்திற்கு நேரே போய்க்கூடும் எனவும், தாம் அத்திருத்தலத்தில் சதா ஆநந்த நிருத்தம் செய்வதாகவும் நடராஜமூர்த்தி ஆதிசேஷனுக்குக் கூறினார். சுழுமுனை நாடியிற் பிராணனை நிறுத்திய யோகிகளுக்குப் பேரின்பப் பெரும்பேறு வந்து எய்துவதை யொப்பச் சிதம்பர ஸ்தலத்தையடைந்து தரிசித்த பேருக்கு முத்தியின்பங் கைகூடுமாதலினால், அண்டத்திலுள்ள சிதம்பரமும் பிண்டத்திலுள்ள சுழுமுனை நாடியும் தம்முள் ஒத்து நடப்பன.

எண்டரு பூந்த மைது மெய்திய நாடி மூன்று
மண்டல மூன்று மாகி மன்னிய புணர்ப்பி னாலே
பிண்டமு மண்ட மாகும் பிரமனோ டைவ ராகக்
கண்டவர் நின்ற வாறு மிரண்டினுங் காண லாகும்.

சித் + அம்பரம் = சிதம்பரம். அம்பரம் என்னும் மொழி, ஆகாசம், வெளி யெனப் பொருள்படும்.

## சிற்சபை பிரமபுரம்

இச்சொல் அம்பலம் எனத் திரிவு பட்டும் நடக்கும். சிதம்பரம் சிற்றம்பலமாகும். ஹிருதய கமலத்திலே சிதாகாச வடிவமாகிய பரவெளி யமைந்திருக்கின்றது. இது அனைத்தினுக்கும் ஆதாரம். சாந்தோக்கியோபநிடதத்தின் எட்டாவது பிரபாடகத்தின் முதற் காண்டம் இவ்வுண்மையைத் தெளிவுபடுத்துகின்றது. அக்காண்டத்தை மொழி பெயர்த்துத் தருவாம்:

1. ஓம் பிரமபுரமாகிய இச்சரீரத்திலுள்ள தகரமாகிய புண்டரீக வீட்டினுள்ளே ஆகாசம் இருக்கின்றது. அவ்வாகாசத்தினுள்ளே யிருக்கிற பொருளைத் தேடியறிதல் வேண்டும்.

2. ''பிரமபுரமாகிய இச்சரீரத்திலுள்ள தகரமாகிய புண்டரீக வீட்டினுள்ளே ஆகாசம் இருக்கிறது, அவ்வாகாசகத்தினுள்ளே எதனைத் தேடி யறிதல் வேண்டும்?'' என (மாணுக்கர்) விசாரிப்பாரெனின்,

3. ''புறத்தே யிருக்கிற ஆகாசம் எவ்வளவு விரிவாயிருக்கிறதோ, இருதயத்தினுள்ளே யிருக்கிற ஆகாசமும் அவ்வளவு விரிவாயிருக்கிறது; மண்ணுலகமும் வானுலகமும் காற்றும் நெருப்பும் சூரியனும் சந்திரனும் மின்னற்கொடியும் நக்ஷத்திரக் கூட்டமும் என்று புறத்தே தோன்றுகின்றவும் இனிமேல் தோற்றப் போகின்றவுமாகிய அனைத்தும் அதனுள்ளே யிருக்கின்றன'' என்று (ஆசிரியன்) கூறுவான்.

4. ''எல்லாப் பிராணிகளும் எல்லா விருப்பங்களுமாகிய அனைத்தும் (இச்சரீரமாகிய) பிரமபுரத்தினுள்ளிருக்கின்றன வென்முல், வயது முதிர்ந்து உடல் விழும்போது யாது சம்பவிக்கின்றது?'' என (அவர்கள்) விசாரித்தால், அதற்கு மறுமொழி வருமாறு:



5. ''இதனுடைய மூப்பினுல் அது மூப்படைவதில்லை; இதனுடைய மரணத்தினுல் அது மரணமடைவதில்லை. (இருதய கமலத்தினுள்ளிருக்கும் உண்மைப் பொருளாகிய) அதுவே உண்மையான பிரமபுரம். அது தீங்கற்றதாய், மூப்புச் சாக்காடற்றதாய், துன்பமற்றதாய், பசிதாகமற்றதாய் உண்மையை விரும்பி உண்மைத் தீர்மானங்களைக் கைக்கொள்ளும். (இங்குள்ளார் இடந் தேசங்களின்மேற் பற்று வைத்துக் கட்டளைக் கமைந்து நடப்பது போல.)''

6. ''இவ்வுலகத்திற் பாடுபட்டுத் தேடிய பொருள் அழிந்துபோவது போலப் புண்ணிய பலத்தினுல் வந்த மேலுலக வாழ்க்கையும் அழிந்துபோம். ஆன்மாவாகிய உண்மைப் பொருளை யறியாது இவ்வுலக வாழ்க்கையினின்று நீங்குவோர் மற்ற உலகங்களிலும் பந்த முற்றவராவார். இவ்வுலக வாழ்க்கையில் ஆன்ம ஞானத்தை யடைந்தவர் எல்லா உலகங்களிலும் பந்தமற்ற வீட்டு நிலையை யடைந்தவராவார்.''

மேலே சுருதியுரைத்த ஆகாசமே சிதாகாசமெனப் படுவது.

சித்தாகாசம், பூதாகாசம் என வேறு இருவகை ஆகாசங்கள் இருக்கின்றன. நம்முடைய இயல்பினை நோக்கும்போது நாம் ஒருவரில் மூவராயிருக்கின்ற தன்மையை யறிவோம். சீதோஷ்ணங்களால் வருந்தும் போதும் நோயுற்றபோதும் உடலமே நாமென்று நினைத்துத் துன்புறுவோம்.

## பஞ்சபூத பரிணுமம்

ஞான சாஸ்திரங்களை யாராயும்போது அவற்றின் மேற் கருத்துப் பதியச் சரீரத்தை மறந்து மனமே நாமென்னு மெண்ண முற்றிருப்போம். மனம் மடிந்த சமாதி நிலையில் சிவத்தோடு அத்துவிதமாக நின்ற நமது உண்மை நிலையை யறிவோம். மேலே யெடுத்துக் காட்டிய சுருதியினுல் அறிவுறுத்தப்பட்டது அவ்வுண்மை

நிலேயேயாம். இம்மூன்று நிலேக்கு மொப்பவே மூவகை யாகாசமும் நிலேபெற்று நின்றன. பிரபஞ்சத்திற்கு முதற் காரணமாகிய மாயையும் மூன்று. அவை சுத்த மாயை (மகாமாயை, பரப்பிரகிருதி, விந்து, குண்டலினி, வித்தை, மாயை, பரை, பரவாகீசுவரி என்பன பரியாய நாமங்கள்), அசுத்தமாயை (சூக்குமப் பிரகிருதி, மோகினி), பிரகிருதிமாயை (தூலப்பிரகிருதி, மகத்) என்பன. தூலப் பிரகிருதியினுட் சூக்குமப் பிரகிருதியும் சூக்குமப் பிரகிருதியினுள் மகாமாயையும் வியாபித்து நிற்பது போலப் பூதாகாசத்தினுட் சித்தாகாசமும் சித்தாகாசத்தினுட் சிதாகாசமும் வியாபித்து நிற்பன. ஆதலினுல் சிதாகாசமே அனேத்தினுக்கும் ஆதாரமானது. ஆகாசத்தினின்று வாயுவும் வாயுவினின்று தேயுவும் தேயுவினின்று அப்பும் அப்பினின்று பிருதுவியுந் தோற்றுவன வென்பது சமயநூலுக்கும் பௌதிக சாஸ்திரத்துக்கும் ஒப்ப முடிந்ததாதலின், பருப் பொருளாகிய பிரபஞ்சத் தோற்றமாக நங்கண் முன்னே தோற்றுகிற மண், நீர், நெருப்பு, காற்று என்னும் நான்கு மகா பூதங்களும் அருவுருவடிவவான பூதாகாசத்தினின்று தோற்றின வென்பது புலப்படுகின்றது. ஆசாச (Ether)ப் பரப்பிலே நீரிற் சுழிகள் போற்றேன்றி நின்ற நுண்ணிய மின்னுருக் (Electrons) களின் கூட்டமாகிய அணுக்களா (Atoms) லமைந்தன அனேத்துச் சடப்பொருட்களுமெனத் தற்காலத்து விஞ்ஞான நூலாசிரியருங் கூறுவர். சிதாகாச சித்தாகாசங்களினியல்பை அன்னுரறியார்.

### பஞ்சகிருத்தியத் தலேவர்

இனித் தோற்றக் கிரமத்தை யாராயும்போது அதுவும் தூலசிருஷ்டி, சூக்குமசிருஷ்டியென இருவகைப் படுமென்றறிவாம். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்சகிருத்தியங்களும் மண், நீர், அனல், வாயு, ஆகாசம் என்னும் பஞ்ச



பூதங்களும் நிரனிறையாக ஒன்றினேடொன்று தொடர்புற்று நிற்பன. அருவுருவமாகிய ஆகாயத்தினின்று உருவ பூதங்களாகிய வாயு, தேயு, அப்பு, பிருதுவி யென்னுமிவை முறையே தோற்றியதுபோல நிஷ்கள, சகள வடிவினராகிய சதாசிவ மூர்த்தியிடத்தினின்று மகேசுவரர், உருத்திரர், விஷ்ணு, பிரமா என்னுஞ் சகள மூர்த்திகள் நால்வரும் முறையே தோற்றுவர். பிருதுவி தத்துவத்தினுள் வியாபித்து நின்ற நிவிர்த்தி கலையை யதிஷ்டித்த பிரமதேவர் உலகங்களேப் படைப்பார். நாராயண (நீரிற்றேன்றிய) மூர்த்தி உலகங்களேக் காப்பார். அக்கினி நிறத்தினராய் அக்கினி புவனத்திலிருக்கும் உருத்திரர் அழித்தற்றெழிலேச் செய்வார். வாயு புவனத்தினின்ற மகேசுரர் மறைத்தற் றெழிலேச் செய்வார். ஆகாய புவனத்தில் வசிக்கும் சதாசிவர் அநுக்கிரகத் தொழிலேச் செய்வார்.

பரசிவம் பிரம மென்னப் பட்டொரு திரிவு மின்றி
உரைமன மிறந்து நின்ற வொருசிவ லிங்கந் தன்னின்
வருமுயர் சதாசிவன்றன் மற்றவன் றனேப்பொருந்தும்
அருமைகொண் ஞானசத்தி யவர்களாற் சிவனு திப்பன்.

( சிவனென்றது மகேசுவரரை )

சாற்றுமச் சிவனுக் கிச்சா சத்தியவ் விருவரானுந்
தோற்றுவ னுருத்தி ரன்றன் சொல்லிய விவர்க்குச் சத்தி
மாற்றருங் கிரியை யென்ப மற்றிவ ரிருவர் பாலும்
போற்றுறு மரியு திப்பன் பொறியவன் சத்தி யாமால்;

அத்திரு மாலு மாவு மளிப்பவந் துதிப்பன் வண்டு
மொய்த்திசை முரலுஞ் செங்கேழ் முளரிவா னவன வற்குச்
சத்திவெண் கமலேயின்னுர் தரவரு முலகத் தோற்றம்
நித்தனங் குருகு கேச னினேவுமாத் திரையி னுமால்.

### திருநடனத்தினுலே பஞ்சகிருத்தியமும் நடைபெறுவன

''அவனன்றி யோரணுவு மசையாது'' என்னும் ஆப்தர் வாக்கின்படி பஞ்சகிருத்தியத் தலேவர் பரமபதியாகிய இறைவனுடைய அருட்சத்தியினுலே ஐந்தொழி

லும் நிறைவேற்றுவர். அவன் இயக்காவிட்டாற் பஞ்ச கிருத்தியங்களும் நடைபெறமாட்டா. முதல்வன் உயிருக்குயிராகி நின்றமையினால் அவன்மேற் பட்ட அடி சர்வ ஜீவகோடிகள் மேலும் பட்டது; அவன் சனகர் முதலிய முனீந்திரர் நால்வருக்கும் ஞானபாதத்தை யுபதேசித்த பொழுது ஒருகண நேரத்துக்கு யோக நிலையிலிருக்க விண்ணுலகத்துத் தேவரும், மண்ணகத்து யானிடரும் காமப் பற்றின்றியிருந்தனர்; உமாதேவியார் இறைவனது கண்ணினை மறைக்க எல்லாவுலகங்களிலும் இருள் சூழ்ந்து கொண்டது.

நாயகன் கண்ணை யப்பா னாயகி புதைப்ப வெங்கும்
பாயிரு ளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே சுடரொளி கொடுத்த பண்பிற்
றேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனுருத் தேச தென்னார்.

கண்ணுதல் யோகி ருப்பக் காமனின் றிடவேட் கைக்கு
விண்ணுறு தேவ காதி மெலிந்தமை யோரார் மாறான்
எண்ணிவேண் மதனை யேவ வெரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப் பேரின்ப மளித்த தோரார்.

போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரித லோரார்
யோகியா யோக முத்தி யுதவுத லதுவு மோரார்
வேகியா னாற்போற் செய்த வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூட ரெல்லா மும்பரி னொருவ னென்பார்.

உலகமே யுருவ மாக யோநிக ளுறுப்ப தாக
இலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக
அலகிலா வுயிர்கட் கெல்லா மறிவினை யாக்கி யைந்து
நலமிகு தொழில்க ளோடு நாடக நடிப்ப னாதன்.

அரங்கத்திலே புகுந்து நடிக்கின்ற கூத்தற்கு உருவு முறுப்பும் கரணமும் பயனுந் தொழிலும் அமைந்தவாறே, சிதாகாசமாகிய அரங்கத்து நடிக்கும் பரம நாடகனாகிய முதல்வனுக்கும் அசித்துப் பிரபஞ்சம்



தூல உருவமாகவும் சித்துப் பிரபஞ்சம் உறுப்புக்களாகவும், இச்சை ஞானக் கிரியைகள் கரணமாகவும் உயிர்கட்கு அறிவினையாக்கி வைத்தல் பயனாகவும் பஞ்ச கிருத்திய விரிவே தொழிலாகவும் அமைந்துநின்றன.

## பஞ்சகிருத்திய வடிவத்தின் இலக்ஷணம்

தோற்றப் பொருளனைத்திற்கும் ஆகாசம் ஆதாரமென முன்னர்க் கூறினாம். இவ்வாகாசம் ஒலிபற்றி யெழுவது; ஆதலால் இறைவனுடைய கையிலேந்திய டமருகம் ஒலிக்குறிப்பின் வழிவந்த ஆகாசத்துக்கு உற்பத்தித் தானமானது. ஆதலால் அனைத்துப் பொருட்களுக்கும் உற்பத்தித் தானமாயிற்று. "அஞ்சன்மின்" என்னுங் குறிப்பினைக் காட்டும் அபயகரம் காத்தற் றொழிலைச் செய்கின்றது. கையிலேந்திய அக்கினி சங்காரத் தொழிலைச் செய்வது. முயலகன் ஆணவ வடிவம்; அவனை மிதித்த திருப்பாதம் மறைத்தற் றொழிலைக் காட்டுவது. தூக்கிய திருப்பாதத்தின் நீழலில் இந்தக் கலியுகத்திற்றானும் திருநாளைப் போவார் நாயனாரென்னும் நந்தனாரும், திருவாதவூரடிகளும் அடைந்தார்கள்.

## சிதம்பர ரகசியம்

சிதம்பரத்தில் சிற்சபையிலே, நடராஜமூர்த்திக்கு வலப்பக்கத்திலே மாசுபடியா ஆகாய மூர்த்தமாகிய சிதம்பர ரகசியம் இருக்கின்றது. இம் மூர்த்தம் நாம ரூப விகற்பப்படாதது; ஆதலினால் அனைவராலும் வழிபடற்குரியது.

சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயகங்கே ளப்பொருளுந் தானொன் றாகப்
பன்மார்க்க நெறியிலுங் கண்ட தில்லை
பகர்வரிய தில்லைமன்றுட் பார்த்த போதங்

கென்மார்க்க மிருக்குதெல்லாம் வெளியே யென்ன
வெச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்
கன்மார்க்க நெஞ்சமுள வெனக்குந் தானே
கண்டவுட னானந்தங் காண்ட லாகும்

எனத் தாயுமான சுவாமிகள் கூறிய செய்யுளை நோக்குக. காஞ்சியிற் பிருதுவி மூர்த்தமாகவும் திருவானைக்காவில் அப்பு மூர்த்தமாகவும் திருவண்ணாமலையிற் றேயுமூர்த்தமாகவும் திருக்காளத்தியில் வாயு மூர்த்தமாகவும் சூரியவிம்பத்திற் சூரிய மூர்த்தமாகவும் சோமநாதத்திற் சந்திரமூர்த்தமாகவும் அனைத்துயிர்களிடத்திலும் பசுபதியாகவும் அமர்ந்த முதல்வன் சிதம்பர ரகசியத்தில் ஆகாய மூர்த்தமாக விளங்குவான்.

## ஆநந்த நடனம்

ஐந்தொழில்களும் ஆநந்த நடனத்தினால் நடந்தேறுகின்றன வெனவுணர்ந்தோம். நாம் சூத்திரப் பாவை; கயிற்றை யியக்கி நம்மை யாட்டுபவன் நடராஜன். தில்லைமன்றுணடிக்கின்ற திருநடனத்தைக் கண்டு தரிசித்தோர் மேலான உண்மைப் பொருளைக் கண்டு தெளிந்து பிறவிப் பயனைப் பெறுவார்களாதலினால் "தெரிசிக்க முத்திதரும் சிவசிதம்பரம்' என ஆன்றோர் கூறினார்.

செய்ஞ்ஞின்ற நீலமலர்கின் தில்லைச்சிற் றம்பலவன்
மைஞ்ஞின்ற வொண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்து நிற்க
நெய்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்
கைஞ்ஞின்ற வாடல்கண் டாற்பிள்ளைக் கண்கொண்டு
(காண்பதென்னே.

தில்லைத் திருநடனத்தைக் கண்டு தரிசித்த கண்ணினாலே பின்னர்க் காண்பதற்குத் தகுந்த பொருள் வேறு இல்லையாதலால், மைதீட்டிய ஒள்ளிய கண்ணினை



ருடைய உமாதேவியார் கண்டு மகிழ்ந்து நிற்ப, எம் இறைவன் கனகசபையின் கண்ணே எந்நாளும் செய் நின்ற ஆனந்த நடனத்தைக் காண்பதே கண்ணினைப் பெற்ற பயனாகும்.

குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிழ்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த வையகத்தே.

திருச்சிற்றம்பலம்.

# பஞ்சபுராணம்

## திருமுறை

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே.

## திருவாசகம்

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பாற்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறு சிவனே
எந்தையே ஈசா வுடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனோர்கைம் மாறே.

## திருவிசைப்பா

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள் வீற்றிருந்த
வங்கணா போற்றி யமரனே போற்றி
யமரர் கடலைவனே போற்றி
தங்கணான் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந்தருளு
மெங்கணாயகனே போற்றி யேழிருக்கை
யிறைவனே போற்றியே போற்றி.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

## திதி வெண்பா

இரத்தாட்சித் தைபதினெட் டேய்ந்த முப்பத் தொன்றோன்றெண்
பத்தைந்து தேர்பூர்வ பத்துதிதி — உத்தமனோர்
வேலணையூர்ச் சண்முகத்தார் வேட்டபொன்னம் மாசேர்ந்தார்
காலனைமுன் காய்ந்தான் கழல்.